## ஆங்கில மொழி பட்டப்பின் படிப்பு நிறுவகம் - 2015

ஆங்கில மொழி பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் III ஆம் பிரிவில் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

ஆங்கில மொழி பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03**

நடைமுறையல்லாச் சொத்துக்களுக்காக பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 2,723,538 கிரயமான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டிருந்தும் தொடர்ச்சியான பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வழுக்களைத் மீளத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

சொத்தொன்று நிதியல்லாத கொடுக்கல் வாங்கல் மூலம் பெறப்பட்ட சந்தர்ப்பத்தில் அச் சொத்தின் கிரயமாக சொத்து கையேற்கப்பட்ட தினத்தில் உள்ளவாறு காணப்பட்ட நியாயமான பெறுமதி (Fair Value) நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், திறந்த பல்கலைக்கழகம் மூலம் கையளிக்கப்பட்ட 4.8 பேர்ச் காணியின் அளவு மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2011 யூலை 12 ஆந் திகதிய 959 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | தகுதிகாண் காலத்தில் இருக்கின்ற சிரேஷ்ட விரிவுரையாளரொருவருக்கு சம்பளத்துடனான வெளிநாட்டு விடுமுறை வழங்கப்பட்டு சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,749,923 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட தாபனச் சுற்றறிக்கை 04/2013 | வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை எதிர்வரும் ஆண்டின் மார்ச் 17 ஆந் திகதி அல்லது அதற்கு முன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு | பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் கல்விசார் பதவியணியினரின் வருகை தொடர்பாக உறுதிப்படுத்தப்படாமல் மீளாய்வாண்டில் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 7,868,876 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2011 சனவரி 27 ஆந் திகதிய PED 56 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | ஏதாவது அரச நிறுவனமொன்றில் மிகை நிதி காணப்படுமாயின் எதிர்வரும் 06 மாதங்களுக்குத் தேவையான தொழிற்படு மூலதனத் தேவை தவிர மிகுதி திறைசேரிக்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக திறைசேரி அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் போது ரூபா 61,494,422 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி நிறுவகத்தின் மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 5,656,049 மிகையாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,400,723 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதிவிளைவுகளில் ரூபா 3,255,326 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அரசாங்க மானியம் ரூபா 3,500,000 இனால் அதிகரித்தமை மேற்படி அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை தொடர்ச்சியாக நிதி விளைவுகளில் அதிகரிப்புக் காணப்பட்டன. ஊழியர் ஊதியம், அரசாங்கத்திற்குச் செலுத்தும் வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு என்பவற்றைக் கவனத்திற் கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டில் ரூபா 4,915,394 தொகையான நிறுவகத்தின் பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அது ரூபா 20,665,112 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

நிலையான சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கும் பாவனைக்கு எடுக்க முடியாத சொத்துக்கள் நிலையான சொத்துப் பதிவேட்டிலிருந்து அகற்றுவதற்கும் முகாமைத்துவ சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 4.2 நிதியத்தின் குறைவான பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 ஆம் ஆண்டின் போது பல்கலைக்கழக கல்வியின் பொருத்தப்பாட்டையும் தரத்தையும் விருத்தி செய்யும் செயற்திட்டம் (IRQUE) மூலம் 12 தேசிய பல்கலைக்கழங்களிலும் 02 தனியார் நிறுவனங்களிலும் ஆங்கில மொழியில் தேர்ச்சியை ஏற்படுத்துவதற்காக மதிப்பீட்டைச் செய்வதற்கான நிறுவகத்திற்கு ரூபா 6,623,925 தொகை வழங்கப்பட்டிருந்தது. அந்த தொகையில் செலவிட்ட பின்னர்

எஞ்சிய ரூபா 3,898,298 தொகை முகாமைத்துவத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிறுவகத்தின் மூலதனச் செலவினத்திற்காக திறைசேரியிலிருந்து கிடைத்த மானியம் முழுமையாகப் பயன்படுத்தப்படாமல் மூலதனச் செலவினத்திற்காக மீண்டும் விண்ணப்பித்து நிதி பெற்றுக்கொள்ளப்பட்டதால் 2014 ஆம் ஆண்டிலும் மீளாய்வாண்டின் இறுதியிலும் முறையே ரூபா 8,216,882 மற்றும் ரூபா 44,676,211 தொகையான மூலதனம் மானியம் விளைவற்றுக் காணப்பட்டன.

**4.3 கொள்வனவு மற்றும் ஒப்பந்தச் செயற்பாடுகள்**

ஆங்கில மொழி பட்டபின் படிப்பு நிறுவகத்திற்காக 4 மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 80,454,356 (வரி தவிர்த்து) பெறுமதியில் ஒப்பந்தமொன்று கையளிக்கப்பட்டிருந்தது. இதற்காக 2014 செப்தெம்பர் 01 ஆந் திகதி வழங்கப்பட்ட ரூபா 16,090,871 ஆன வேலை ஆரம்பிப்பு முற்பணத்திற்கு மேலதிகமாக செயற்திட்ட மேற்பார்வை பொறியியலாளரின் சான்றிதழின்றி ஒப்பந்தக்காரரினால் சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியலை அடிப்படையாகக் கொண்டு இரண்டு சந்தர்ப்பங்களின் போது கூட்டுமொத்தமாக ரூபா 16,650,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**4.4 முறைப்படி கையேற்கப்படாத காணியொன்றில் கட்டிட நிர்மாணம்**

ஆங்கில மொழி பட்டபின் படிப்பு நிறுவகத்திற்கு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மூலம் சட்டரீதியான உரித்துறுதி கையளிக்கப்படாத காணியொன்றில் 04 மாடிககளையுடைய ரூபா 90,500,000 பெறுமதியான கட்டிடமொன்று நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் காணியின் உரித்தை நிறுவகத்திற்குக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கும் போது உள்ளடக்கப்பட வேண்டிய அடிப்படை விடயமான பௌதீக மற்றும் மனித வளங்கள், நிறுவனக் கட்டமைப்பு, சாத்திய வள ஆய்வு மற்றும் கடந்த 03 வருடங்களின் செயற்பாட்டு முகாமைத்துவம் தொடர்பான விபரங்கள் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்**

தந்திரோபாயத் திட்டத்தின் மூலம் 2014, 2015 ஆம் ஆண்டுகளின் போது நிறைவேறுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட சகல செயற்பாடுகளையும் மேவுகை செய்யும் வகையில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 உள்ளகக் கணக்காய்வு**

நிறுவகத்தில் நிரந்தரமாகப் பேணப்படுகின்ற நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காதிருந்த அவ்வாறான குறைபாடுகளை குறைப்பதற்காக உள்ளகக் கணக்காய்வு திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

**5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீடு செய்யப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்களை உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களுடன் ஒப்பீடு செய்த போது பொருண்மையான முரண்களைக் காணக்கூடியதாகவிருந்தன. அதன்படி பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகப் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | பதவியணியினர் நிர்வாகம் | - நிறுவகத்தின் பதவியணியினர்களின் வருகை, வெளிச் செல்கைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | ஒப்பந்தக் கட்டுப்பாடு | அலுவலகக் கட்டிட நிர்மாண ஒப்பந்தத்திற்காக உரிய மேற்பார்வையின்றி முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | நிதிக் கட்டுப்பாடு | மூலதன மானியங்கள் முறைப்படி பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | உள்ளகக் கணக்காய்வு | நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டை பலப்படுத்துவதற்காக உள்ளகக் கணக்காய்வை பயன்படுத்திக்கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |